# தெரிவுக்குழு முடிவுகள் இனப்போரை நிறுத்தாது

(லண்டன்)

இலங்கையில் நிலவும் இனப் போரை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவுகள் முடிவுக்கு கொண்டு வரும் என்று நம்பஇடமில்லை என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுநியமிக்கப்பட்டு ஓராண்டு கடந்துள்ள வேளையிலும் தமிழ் மற்றும் சிங்கள அரசியல் வாதிகளிடையேயுள்ள தூரம் மிகவும் அதிகமாகவே தெரிகின்றது.

ஒருமித்த உடன்பாடு ஒன்றைக் காண்பதற்காக அமைக்கப்பட்ட நாடாளு

(4ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 84 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 6 இதழ் 34
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21 — 12 — 1992

## தீர்வுதிட்டத்தில் ஒரு மர்மம் நிலவுகிறது

(லண்டன்)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் முன்வைக்கப்பட்ட வடக்குக்-கிழக்கு இணையாத மாகாண சபைத் தீர்வுத் திட்டத்தில் ஒரு மர்மம் நிலவுகின்றது.

இவ்வாறு லண்டன் பி. பி. ஸி.க்கு அதன் கொழும்புச் செய்தியாளர் ஷியாமோ நோஸ் தெரிவித்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இந்தக் குழு கூட்டப்பட்டு

4-ம் பக்கம்பார்க்க)

# மன்னாரில் புலிகள் திடீர் அதிரடி
# 10 இராணுவத்தினர் உயிரிழப்பு!

(மன்னார்)

**மன்னார் நானாட்டான் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 10 இராணுவத்தினர் பலியானார்கள் நான்கு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.**

நேற்று அதிகாலை நவீன ஆயுதங்கள் சகிதம் விடுதலைப் புலிகள் அணியினர் நானாட்டானில் உள்ள இராணுவக் காவலரண்கள் மீது கடும் தாக்குதலைத் தொடுத்தாகவும் புலி வீரர்களின் தாக்குதலினால் நிலைகுலைந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் தமது நிலைகளிலிருந்து பின்வாங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற மேற்படிமோதல் சுமார் 2 மணி நேரம் நீடித்ததாகவும் இம்மோதலினால் இப்பகுதி அதிர்ந்தவண்ணம் இருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-சி-ரி, 56)

## ஜனாதிபதி தேர்தலுக்கு முன் தமிழர்களின் பிரச்னைக்கு தீர்வு காணப்படவேண்டும்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குமுன்னர் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென்று இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## றெனிக்கு காமினி பாராட்டு லலித் கடும் அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் திரு. றெனி டி மெலுக்கு திரு. காமினி திஸநாயக்கா பாராட்டுத் தெரிவித்திருப்பது குறித்து திரு. லலித் அத்துலத்முதலி கடும் அதிருப்தி கொண்டுள்ளாராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு பிரச்னையே நாட்டின் முக்கிய பிரச்னை

(கொழும்பு)

வடக்குக்-கிழக்குப் பிரச்னை இன்று ஒரு முக்கியமான பிரச்னையாகும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

சுகததாசா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 38வது வருடாந்த மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமிலிருந்து தொடர் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து வலிவடக்குப் பகுதிகளை நோக்கி படையினர் தொடர்ச்சியாக இரவு நேரங்களில் ஷெல்த்தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

இரவு 10-00 மணிக்குமேல் படையினர் ஏழாலை, குப்பி

(4 ம்பக்கம் பார்க்க)

## ஐ. தே. க வில் 42 லட்சம் பேர்

(கொழும்பு)

ஆளும் ஐ. தே கவில் தற்போது 42 லட்சம் பேர் உறுப்பினர்களாக இருப்பதாக ஜனாதிபதி திரு. பிரேம

(4ம் பக்கம் பார்க்க)

## படைகளுக்கு உதவியாக பெண் ஊர்காவற்படை

(மணலாறு)

மணலாற்றுப் பகுதியில் முதன் முறையாக பெண்கள் ஊர்காவற்படை ஒன்றை ஸ்ரீலங்கா அரசு அமைத்துள்ளது.

ஏற்கனவே அமைக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் பொலிஸாரின் வீதி சோதனைகள் குறைப்பு

(மட்டக்களப்பு)

மட்டு. நகரில் பொலிஸார் மேற்கொண்டு வந்த வீதிச் சோதனைகள், பல கடந்த வெள்ளிக்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளன.

கல்லடிப் பாலம், கல்லடி

(4-ம் பக்கம் பார்க்க)

## எதிர்காலத்தில் புலிகளை வெல்வது கடினமாகும்

(கொழும்பு)

"ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமது படையின் பலத்தைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்வது மிகவும் கடினமானதாகும்".

கொழும்பிலுள்ள பிரபல அரசியல் விமர்சகர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் அரசு தனது படை பலத்தைப் பெருக்கும் முயற்சியில் ஹெலிகாப்டர்கள், மற்றும் நவீன ரக போர் விமா

(4-ம் பக்கம் பார்க்க)

## குமண கப்பல் நாளை வருகிறது

(திருநெல்வேலி)

குமண கப்பல் நாளை வந்து சேரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலில் தபால் பொதிகளும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச புத்தகங்களும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் எடுத்து வரப்படவுள்ளன.

இக்கப்பலில் 800 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. 157)

★ கிளாலி சேவை ஆரம்பமானதால்

## பதுக்கல் பொருள்கள் வெளிவந்தன விலைகள் பெரும் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கிளாலி படகுச் சேவை ஆரம்பமானதை அடுத்து, பெரும் தொகையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

பொருள்களின் வரவைத் தொடர்ந்து, பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்கள் பாசவும் நேற்று வெளியில் வந்ததுடன், அவற்றின் விலைகளிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

மேலும் பல பொருள்களின்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெர்மனியில் வசிக்கும் ஈழத்தமிழர் இடம்பெயர்வு

(கொழும்பு)

ஜெர்மனியிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு அகதிகள் மீதான தாக்குதல்கள் ஜெர்மனியில் அதிகரித்துள்ளதை அடுத்தே இலங்கைத் தமிழ் அகதிகள் இவ்வாறு இடம் இடம் பெயர்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது

ஜெர்மனியில் வெளிநாட்டு அகதிகள் வசிக்கும் வீடுகள் முகாம்கள் நாஜிக்குழுக்களினால் தாக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (பி)

## புலிகள் மீதான தடை சரியானது டில்லி நீதிமன்றம் ஊர்ஜிதம்

(புதுடில்லி)

இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கம் மீது தடைவிதிக்கப்பட்டது சரியானதே என்று புதுடில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விடுதலைப்புலிகளை சட்ட விரோதமான அமைப்பாக அறிவிக்கப்பட்டதற்கு போதுமான அடிப்படை உள்ளதா என்பதை விசாரிப்பதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகபுலம் சமதிதர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7052)

### ஆனந்தா கலண்டர்

எல்லா விபரங்களும் அடங்கிய ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் 1993. மலிவு விலை ரூபா 30-00 மட்டுமே. (எ-2696)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசுாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமான வரிசகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். சி-7035

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய புதிய கல்வி நிலைய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா 27ம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இங்கு கல்விகற்று சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் பெயர்களையும் புள்ளிகளையும் 23ம் திகதிக்கு முன் பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

## இராசி பலன்

**21-12-1992**

**(தமிழுக்கு மார்கழி 06)**

**திங்கட்கிழமை**

துவாதசி காலை 7-32 வரை விசாகம் பி. ப. 2-17 வரை, மரணயோகம் இராகுகாலம் காலை 7-55 முதல் 9-25 வரை. சுபநேரம் நண்பகல் 12-25 முதல் 1-55 வரை கரிநாள் பிரதோச விரதம்.

மேடம்: உறவினர் அதிருப்தி வீண் அலைச்சல், மனக்கவலை.

இடபம்; லாப அதிகரிப்பு, அறிஞர் பாராட்டு, தொழில் வெற்றி.

மிதுனம்: விருந்துண்ணல், காரியசித்தி, இன்ப நிகழ்வு.

கடகம்: நண்பர்கள் ஏமாற்றம், தற்காலிக பிரிவு வெறுப்பு:

சிங்கம்: கெடுபிடுப்பு, வீண் பிரச்சனை, மனக்கவலை.

கன்னி: தத்துவ ஈடுபாடு, தொழில் லாபம், பணவரவு

(4ம் பக்கம் பார்க்க)

NEW ADMISSION FOR THE FULL-TIME DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1991/92

Applications are invited for the above course from non-graduate teachers of English. Applicants should be less than 50 years of age as at 1993-01-01.

candidates should have at least a credit pass in English in G. C. E. (O/L), with at least 3 passes in the G. C. E. (A/L), and should have a minimum of five year's English Language Teaching experience candidates with trained teacher's cert ficates with also be considered for admission.

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar/Academic after payment of fees of Rs. 10/- at the Finance Branch.

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test.

Please forward the application through your principal to Senior Asst. Registrar, Academic Branch, University of Jaffna, Thirunelvely before 1993-01-05. The Admission Test will be held on 993-01-15

**REGISTRAR,**
University of Jaffna.
1992-12-18. (A-2700)

NEW ADMISSION FOR THE FULL-TIME POST-GRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGETEACHING 1991/92

Applications are invited for the above course from Graduate teachers of English. Applicants should be less than 50 years of age as at 1993-01-01.

A graduate with English as a subject for his/her degree should have a minimum of two year's English Language Teaching experience. A graduate without English as a subject sould have a minimum of four year's experience.

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar/Academic after Payment of fees of Rs. 10/- at the Finance Branch.

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test.

Please forward the application through your principal to Senior Assistant Registrar, Academic Branch, University of Jaffna. Thirunelvely before 1993-01-05. The Admission test will be held on 1993-01 15

**REGISTRAR,**
University of Jaffna.
1992-12-18. (A-2701)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ''விநாயக கிராம நல்லொழுக்க கழகம்'' நடாத்தும் மதுவிலக்கு கருத்தரங்கும், கலை நிகழ்ச்சியும் இன்று திங்கட்கிழமை பி. ப. 2-30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிகளில் டாக்டர் சங்கர் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை), திரு. த. சிவகுமாரன் (கம்பன் கழகம்) மதுவிலக்கு, சமாதானம், சகோதரத்தும் என்ற தலைப்புகளில் கருத்துரைவழங்குவார்கள்.

0 0

(அரியாலை)

இன்று திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும், யாழ். ஜொனியன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் கூடைபந்தாட்டம் நடைபெறவுள்ளது. (59)

## இலவச போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

'குமண' கப்பலில் வரவிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், வெள்ளைச் சீருடைகள் ஆகியவற்றை பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இலவசமாகக் கொண்டுவருவதற்கான பொறுப்பை பருத்தித்துறை வாகன சேவையாளர் ஒன்றியம் ஏற்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (சு)

# நீ தெய்வமாய் ஒரு திங்கள்

★★★★★ ★★★★★



★★★★★ ★★★★★

செல்வி

**சாகித்தியா திருநந்தகுமார்**

**மலர்வு:** 30-07-1991

**உதிர்வு:** 21-11-1992

பிள்ளைக் கனியமுதே!
மலர்ந்தும் மலராத பாதி மலர் போன்று
மலர்ப்படுக்கையில் நீ வளர்ந்திருந்த கோலம்
எம் உள்ளங்களில் உறைந்துவிட்ட ஓவியமாய்......
மனித தெய்வங்கள் உன்னைக்
'கவனிக்க' மறந்தமையினுல் தான்
நீ மரணத்தைத் தழுவிக் கொண்டாயோ?
தினமும் உன் வரவிற்காய் தியானித்திருக்கின்றோம்.

அப்பா, அம்மா,
குடும்பத்தினர்

''இராணி மாளிகை''
இணுவில். (சி 7086)

# 47-ம் நாள் நினைவஞ்சலி

**தோற்றம்:** 23-01-1905

★ ★



**மறைவு:** 05-11-1992

திருமதி

**நல்லம்மா இராசரத்தினம்**

பாசமுடன் எமை வளர்த்த எங்களது அன்புத்தாய்
ஈசனடி நிழலிலே இன்புற்று இருந்திடவே
நேசமுடன் நாம்கூடி நெஞ்சம் நெகிழ்ந்து
கைலை வாசனவன் கருணையினை வேண்டி வணங்குகின்றோம்.


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''மகேஸ்வரவாசா''
வட்டு-மேற்கு,
வட்டுக்கோட்டை.
21-12-1992. (சி 7080)

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு:** 09-02-1937

★ ★ ★



**உதிர்வு:** 21-12-1987

**அமரர் சீ. செல்லத்துரை**

(முன்னுள் மேற்பார்வையாளர், போதனு வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

ஆண்டைந்து ஓடி மறைந்திடினும்
உம் அருமைமுகம் எம்மைவிட்டு மறையவில்லையே,

நீங்காத உன் துயரால் துயருறும்:
அன்பு மனைவி தவமணிதேவி,
பிள்ளைகள்: ஜெகதீஸ்வரி (இத்தாலி),
ஜெயந்தி (ஜேர்மனி), ஜெயஸ்ரீ (கொழும்பு)
ஜெயகாந்தன் (இத்தாலி), ஜெயரூபன்,
மருமக்கள்: தர்மரத்தினம் (ரவி) (இத்தாலி),
சுபேந்திரன் (சுபி) (ஜேர்மனி)
பேரப்பிள்ளைகள்; நிலுஷா (இத்தாலி)
டிலூஷன் (ஜேர்மனி)

''ஈஸ்வரி வாசம்''
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (சி 7085)

# தமிழக அரசு கலைக்கப்படலாமென தமிழகம் எங்கும் பெரும் வதந்தி

## - அமைச்சர்கள் டில்லி விரைவு -

(சென்னை)

தமிழக அரசு பதவி நீக்கம் செய்யப்படலாமென்ற பலத்த வதந்தி கடந்த ஒரு வாரமாகத் தமிழகத்தில் பரவலாக அடிபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் திருச்சிக்கு வந்த இராணுவ அணிகள் திருவனந்தபுரம் செல்வதாகவும் அங்கு செல்லும் வழியில் திருச்சிக்கு வந்ததாகவும் தமிழகத்திற்கு இராணுவம் அனுப்பப்படவில்லை எனவும் பிரதமர் திரு. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

திருச்சிக்கு இராணுவம் வந்ததையடுத்து மக்களிடையே பெரும் குழப்பமும், தமிழக அரசு பதவி நீக்கம் செய்யப்படலாமென்ற வதந்தியும் அடிபட்டு வருவதாகவும் பிரதமரை நேற்றுமுன்தினம் புதுடில்லியில் சந்தித்த அ. தி. மு. க. அமைச்சர்கள் குழுவொன்று கூறியுள்ளது.

தமிழகத்தில் எழுந்த பரபரப்பையடுத்து முதல்வர் ஜெயலலிதா, தமிழக அமைச்சரவை திரு. அரங்கநாயகம், திரு. கண்ணப்பன், நாடாளுமன்ற அ. தி. மு. க. தலைவர்கள், திரு. வி. சுவாமிநாதன், திரு. பி. ஜி. நாராயணன் மற்றும் பல எம். பிக்களைப் பிரதமரை சந்திக்க அவசரமாக அனுப்பி வைத்திருந்தார்.

இவர்களிடமே பிரதமர் நரசிம்மராவ், தமிழக அரசு கலைக்கப்படமாட்டாதெனக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தமிழக அரசைக் கலைக்கக்கோரி ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியசுவாமி தொடர்ந்தும் மத்திய அரசை நெருக்கி வருவதுடன் அதற்குத் தேவையான பல ஆவணங்களையும் மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளார்.

தமிழகத்தில் நீதி, நிர்வாகம் மிகமோசமாகச் சீர்குலைந்துள்ளதுடன் ஊழலும், அராஜகமும் தலைவிரித்தாடுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தமிழக முன்னாள் 'ஐ. ஏ. எஸ்' அதிகாரியான திருமதி சந்திரலேகா மீதான 'அசிட் வீச்சு' பெரும் பிரச்சினையாகி தமிழக அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. தன் மீது அசிட் வீசப்பட்ட சம்பவத்தை இந்திய மத்திய புலனாய்வுத் துறை (சி. பி. ஐ) விசாரிக்க வேண்டுமென திருமதி சந்திரலேகா நீதிமன்றில் மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இதற்கிடையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, விடுதலைப் புலிகளைக் கடுமையாக எதிர்ப்பதாலும் அயோத்தி விவகாரத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் கொள்கையை ஆதரித்து வருவதாலும் அவரைத் தங்கள் கட்சி ஆதரிப்பதாக பாரதிய ஜனதாக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். மத்திய அரசுடன் இணைந்து நடப்பதை தமிழக அரசு நிராகரித்துவருவதாக 'ஜனதா தள்' கட்சியின் தமிழக பிரிவுத் தலைவர் திரு. சிவாஜி கணேசன் குற்றம் சாட்டியுள்ளார். (சி)

## 6 பலஸ்தீனியர் சுட்டுக்கொலை

(டெல் அவிவ்)

இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவரை சுட்டுக்கொன்றதன் நிமித்தம் 400 பலஸ்தீனியர்களை நாடு கடத்தியதற்கு எதிப்புத்தெரிவித்த பலஸ்தீனியர் ஆறுபேரை நேற்று முன்தினம் இஸ்ரேலியப்படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். (வி)

## நத்தார் சிறுவர் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நத்தார் தினத்தையொட்டி இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள 'அசெம்பளி ஒப் ஹோட்' நடாத்தும் நத்தார் சிறுவர் நிகழ்ச்சி இன்று பி. ப. 3-30 மணிக்கு மேற்படி சபையில் நடைபெறும். சிறுவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை மானிப்பாய் 'அசெம்பிளி ஒப் ஹோட்டும்' பல இசை நிகழ்ச்சிகளை இன்று முதல் அடுத்தவருடம் 1ம் திகதி வரை நடாத்தவுள்ளது. (சி)

## சுப்பிரமணியசுவாமியின் அமைப்பை தடைசெய்யுமாறு கோரி மனு

### நீதிமன்று நிராகரித்தது

(சென்னை)

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தமிழகத்தில் ஆரம்பித்துள்ள 'நல்லாட்சி இயக்கத்தைத்' தடை செய்யுமாறு சென்னை உயர்நீதி மன்றில் அ. தி. மு. க. ஆதரவாளர்கள் சமர்ப்பித்த மனுவை இந்திய நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தமிழக அரசுக்கு எதிராகவும் ஊழல், அராஜகம் அட்டூழியத்தையும் களையும் பொருட்டு தமிழக முன்னாள் அமைச்சர்கள் பலரையும் முன்னாள் ஐ. ஏ. எஸ் அதிகாரியும் ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில் அசிட் வீச்சுக்கு இலக்கானதாக கூறப்படும் திருமதி சந்திரலேகா மற்றும் நூற்றுக்கணக்கான பிரமுகர்களையும் கொண்டு 'தமிழக நல்லாட்சி இயக்கத்தை' டாக்டர் சுப்பிரமணியசுவாமி ஆரம்பித்துள்ளார்.

இந்த அமைப்பு கடந்த சில மாதங்களில் பெரும் பரபரப்பான அறிக்கைகளை ஆதாரத்துடன் வெளியிட்டு வருவதன் மூலம் ஜெயலலிதாவுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றது.

இதையடுத்து சுப்பிரமணியசுவாமிக்கு அவரது ஆதரவாளர்களுக்கும் பல கொலைப் பயமுறுத்தல்களும் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. (சி)

## வடக்கு கிழக்கில் தனித்தனி மாகாணசபை ஈரோஸ் விளக்கம்

(கொழும்பு)

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் சிபாரிசுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தமது கட்சியாருக்கும் அனுமதி கொடுக்கவில்லையென்று ஈரோஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் மட்டுநகர் எம்.பி சேருதாவூத் பஷீர் தனித்தனி மாகாண சபைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று நாடாளுமன்ற தெரிவிக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க, நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று ஈ. என். டி. எல். எவ்வின் அனுமதியின்றி தனித்தனி மகாணசபை திட்டத்தை சமர்ப்பித்து அதற்கு ஆதரவளித்ததை குறித்து யாழ். எம். பி. ஸ்ரீநிவாசனை இக்கட்சி விலக்கியுள்ளதும் தெரிந்ததே. (சு-சி)

## ரஷ்யாவில் ஜெல்ஸின் ஆட்சிக்கு நெருக்கடி

(பீக்கிங்)

ரஷ்யாவின் அதிபர் ஜெல்ஸினின் ஆட்சிக்கு புதிய நெருக்கடிகள் திடீரெனத் தோன்றியதினால் சீனாவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்த அவர் தமது பயணத்தை இடைநிறுத்திவிட்டு ரஷ்யாவுக்குத் திரும்பியுள்ளார்.

அதிபர் ஜெல்ஸினின் புதிய சீர்திருத்த பொருளாதாரக் கொள்கையின் மீது அடுத்த வருடம் ஏப்பிறல் மாதம் 11ம் திகதி நடைபெறவிருக்கும் அபிப்பிராய வாக்கெடுப்பில் அவர் தோல்வியடைந்தால் ரஷ்யாவில் மீண்டும் பழைய கம்யூனிஸ்டுகளின் கரம் ஓங்கிவிடுமெனவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றார்கள். (வி)

## ★ இராணுவ நடவடிக்கையால் பெருமளவு மக்கள் உளவியல் ரீதியாக பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுவரும் இராணுவ நடவடிக்கையில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் பிற இடங்களிலும் தற்போது தங்கியிருப்பவர்களில் பலர் உளவியல் ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி, வலிவடக்குப் பகுதிகளில் கடந்த வருடம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து தமது வசிப்பிடங்களுக்கு மீண்டும் திரும்பிச்செல்ல முடியாத நிலையில் உடமைகளையும், உறவினர்களையும் இழந்த நிலையில் பொருளாதாரக் கஷ்டம், நிரந்தர இருப்பிடமின்மை, உணவு போசாக்கின்மையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மனவிரக்தியடைந்த நிலையில் மனநோய்க்குள்ளாகிவருவதாகவும் இவர்களில் குடும்பப் பெண்களும், மாணவர்களும் அடங்குவர் எனவும் தெரியவந்துள்ளது.

இதே சமயம் மானிப்பாய், யாழ்ப்பாணம் பொதுமருத்துவமனை மனநோய் சிகிச்சைப் பிரிவில் மனநோயினால் பாதிக்கப்பட்டு வருபவர்களும் அதிகரித்து வருவதாகவும் உளவியல் நிபுணர்கள் தெரிவித்துவருகின்றனர். (56)

## பாகிஸ்தான் மீது இந்தியா கண்டனம்

(புதுடில்லி)

அயோத்தி விவகாரத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடவும் மதத்தின் பெயரால் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடவும் பாகிஸ்தான் முயல்வதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

ஐ. நா. சபையில் பேசிய இந்தியப் பிரதிநிதி திரு ஹமீ கான் அயோத்திச் சம்பவத்தை ஒரு தேசத்துரோக சம்பவமாக கருதிய பிரதமர் நரசிம்மராவ் உத்தர பிரதேச அரசையும், ஏனைய 3 மாநில அரசுகளை கலைத்ததையும் 5 வகுப்புவாத அமைப்புகளை தடை செய்ததையும் சுட்டிக்காட்டினார்.

ஆனால் பாகிஸ்தானிய பிரதமர் நவாப் ஷெரீப்பும் ஏனைய தலைவர்களும் இந்தியாவுக்கு எதிராக வெறியை தூண்டும் வகையில் மிகவும் ஆத்திரமூட்டும் கருத்துகளை பேசிவருவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் பாகிஸ்தானில் 100க்கும் மேற்பட்ட இந்துக் கோவில்கள் படுமோசமாக சேதமாக்கப்பட்டது குறித்து பாகிஸ்தான் அரசு கவலை ஏதும் வெளியிடாதது குறித்து பல அமைப்புகள் கண்டனமும் தெரிவித்துள்ளன. (சி)

## யாழ். குடாவில் நோய்க்காவிகளை ஒழிக்க தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் தீவிரமாக பரவியுள்ள நோய்களை ஒழிக்கும் பணி தற்போது யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு நேரடியாகச் சென்று மக்களுக்கு நோய்க்காவிகளைத் தடுக்கும் வழியினையும், சுகாதார நல்வழிப்படுத்தலையும் இதற்கான சுகாதாரப்பகுதி உயர் உத்தியோகத்தர்கள் விளக்கிவருகின்றார்கள்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட மேலும் பல இடங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (56)

## இந்திய கிரிக்கெட் அணி இறுதிப்போட்டியில் வெற்றி

(ஜொகனஸ்பேர்க்)

இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 7வதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தெ ஆபிரிக்க அணி முதலில் ஆடி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்களைப்பெற்றது. இந்திய அணி 47.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 204 ஓட்டங்களை பெற்றது. இதில் பிரவீண் ஆம்ரே 84 ஓட்டங்களைபெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

7 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் தென் ஆபிரிக்கா 5-2என்ற விதத்தில் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தெ. ஆபிரிக்காவில் 23 இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கப்பட்டனர்

(ஜொகனஸ்பேக்)

தென். ஆபிரிக்காவில் 23 வெள்ளை நிற இராணுவ உயர் அதிகாரிகளை, அதிபர் டி கிளாக் பதவி நீக்கம் செய்துள்ளார். இதில் ஆறு ஜெனரல்களும் அடங்குவர்.

இந்த இராணுவ அதிகாரிகள் அரசியலில் ஈடுபட்டுள்ளதுடன் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து பல கறுப்பின மக்களைக் கொலை செய்தும், அரசியலில் குழப்பங்களையும் ஏற்படுத்தியும் வந்தார்கள் என்று அதிபர் டி கிளாக் கூறியுள்ளார். (வி)

## யாழ். ப. நோ. கூ. ச. இயக்குநர்சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத் தெரிவு கடந்த சனிக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கப் பொதுச் சபையால் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் சொலமன் சூ சிறில், ச. த. கணநாதன், ஏ எஸ் தியாகராஜா, ஞா. ஞானசிங்கம், வே. கிருஷ்ணனந்தன், செ. இராசரத்தினம், செல்வி ஏ. மகாதேவி.

# இந்திய அரசுக்கு எதிராக — புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

# வாஜ்பாய் கைதாகி விடுதலை

(புதுடில்லி)

மத்திய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்த முற்பட்ட பாரதீய ஜனதாக்கட்சி தொண்டர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் நேற்று பெரும் மோதல்கள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியின் பல பகுதிகளிலும் இம்மோதல்கள் இடம் பெற்றதாகவும், ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்த முற்பட்ட ஆயிரக்கணக்கான தொண்டர்களை தடுக்கும் முயற்சியில் பொலிசார் ஈடுபட்டபோதே மோதல்கள் இருபகுதியினருக்கும் இடையில் இடம்பெற்றதாகவும் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது. ஆங்காங்கு பஸ்கள் மீது கல்வீச்சு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன

இதற்கிடையில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் புதுடில்லியில் தமது கட்சி அலுவலகத்தில் வைத்து நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு சிலமணி நேரத்தின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கட்சித் தொண்டர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்றில் உரையாற்ற செல்ல முற்பட்டசமயமே இவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திரு. வாஜ்பாய் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதும் உண்ணாவிரதம் மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது. (க)

## நாளை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கணித, விஞ்ஞான சேவைக்கால ஆலோசகர்களிற்கான கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ் கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளரினால் நடாத்தப்படும் மேற்படி கருத்தரங்கில் சகல கணித, விஞ்ஞான ஆலோசகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நித்திரையிலிருந்த பெண்ணின் தாலிக்கொடி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நித்திரை செய்து கொண்டிருந்த குடும்பபெண்ணின் தாலிக்கொடியின் ஒரு பகுதியை அறுத்துக்கொண்டும் அருகில் படுத்திருந்த 8 வயது சிறுமியின் சங்கிலியை திருடிகொண்டும் திருடர் கோஷ்டி ஒன்று தலைமறைவாகிவிட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் யாழ் 1-ம் குறுக்கு தெருவில் நேற்றிரவு இடம் பெற்றது. நாரந்தனையைச் சேர்ந்த திருமதி செந்தில்வண்ணன் தேவிகா, செல்வகணேசலிங்கம்சைலயா ஆகியோர்களின் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுசம்பவம் தொடர்பாக தமிழீழ காவல் துறையினரால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (சி)

### கிளாலி சேவை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிளாலியூடாக, யாழ்.நோக்கி வந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களை எடுத்துவருவதற்கு, விசேட படகுச் சேவை தினமும் கிளாலி கடலில் நடத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உணவுப் பொருள்கள் மற்றும் பயணிகளுடன் வந்து கொண்டிருந்த படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்த முயன்றபோது, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தாக்குதலைத் தடுத்து நிறுத்தி, படையினரை விரட்டியடித்ததைத் தொடர்ந்து நேற்றுக் காலை பெரும் தொகையான உணவுப் பொருள்களும், பிரயாணிகளும் கிளாலியில் வந்திறங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மா, சீனி, மண்ணெண்ணை, தேங்காயெண்ணை, தீப்பெட்டி உட்படப் பல பொருள்கள் நேற்று முதல் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டன. (கி-56-158)

### புலிகள் மீதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு. சி. என். நாத் தலைமையில் கடந்த ஜூன் மாதம் இந்த நடுவர் மன்றத்தை இந்திய அரசு அமைத்தது.

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் செயற்பட்டதற்காக மத்திய அரசு, 1967ம் ஆண்டின் சட்டவிரோத தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த மே, மாதம் 14ம் திகதி விடுதலைப்புலிகள் இயக்கம் மீது தடைவிதித்தது.

தமிழகத்தின் சில பகுதிகளை இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியுடன் இணைத்து தனிநாடு அமைக்கும் நோக்குடன் தமிழகத்தை மையமாக வைத்து விடுதலைப்புலிகள் செயல்பட்டதாகவும் மத்திய அரசும், தமிழக அரசும் நீதிமன்றில் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணங்களில் கூறியிருந்தன.

இதற்காக இலங்கை தமிழ் அகதிகள் என்ற பெயரில் அவர்கள் தமிழகத்தில் ஊடுருவினார்கள் எனவும் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு தங்கமும், ஆயுதங்களும் கடத்தும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழகத்தில் இளைஞர்களிடையே மொழி, இன பிரிவினை உணர்வை தூண்டும் விதத்தில் புலிகள் செயற்பட்டதாகவும் இந்த ஆவணங்கள் குறிப்பிட்டன. (சி)

### இராசி பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

துலாம்: கணவர் நேயம், கடன் சுமை, மனப்போராட்டம்,

விருச்சிகம்: தொழில் சிறப்பு குடும்ப மகிழ்ச்சி, புதிய முதலீடு.

தனுசு: இனம் புரியாத பயம் அகால உணவு, குடும்ப பிரிவு

மகரம்: ஜீவன சிறப்பு, அறிஞர் சந்திப்பு, பயண அனுகூலம்.

கும்பம்: அதிகாரிகள் வெகுமதி, தொழில் பாராட்டு, நண்பருதவி.

மீனம்: விபரீத கனவுகள், பிறர் துன்பம், கௌரவ குறைவு.

— ஜோஸ்யர்

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தையில் ஒரு தங்க நகை கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## முதலை மீட்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி செம்மணி கடலில் 5 அடி நீளமான முதலையொன்று மீனவர்களால் பிடிக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட சில நிமிடங்களில் இந்த முதலை அடித்துக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (159-75)

### ஐ. தே. க.வில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாஸா தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் புதிதாக மேலும் 7 லட்சம் பேர் கட்சியில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார். (சி)

### பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளான், விளான், தெல்லிப்பளைப் பகுதிகளை நோக்கியே படையினர் ஷெல்தாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் வலி-வடக்குப் பகுதி மக்கள், பெரும் அச்சத்துடன் இரவுப்பொழுதைக் கழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (56-158)

### ஜனாதிபதி தேர்தலுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஐ. தே. க. வின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில்: ஜனாதிபதி இனப்பிரச்னையைத் தீர்த்து வைப்பார் என்பதில் நம்பிக்கை வைத்துள்ளோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் இப்பிரச்னை தீர்த்துவைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ரி)

### ஹெனிக்கு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் நாடு திரும்பிய திரு. ஹெனி டி மெல்லுக்கு முன்னாள் தோழர் என்ற முறையில் திரு. காமினி திஸநாயக்கா வாழ்த்துத் தெரிவித்ததற்கே திரு. அத்துலத்முதலி அதிருப்தி தெரிவித்துள்ளாராம்.

முன்னாள் அதிபர் திரு. ஜெயவர்த்தனா காலத்திலிருந்து நீண்ட காலமாக திரு ஹெனி டி மெல்லும் திரு. லலித் அத்துலத்முதலியும் பலத்த கருத்து வேறுபாடு கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது (சி)

# இந்திரா காங்கிரஸ் கட்சி தலைமை மாறவேண்டும்

(சென்னை)

காங்கிரஸ் (ஐ) கட்சியின் தலைமை மாறவேண்டுமெனத் தமிழக அமைச்சர்கள் இருவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்துக் காங்கிரஸ் கட்சி பலத்த கண்டனம் தெரிவித்ததுடன், இதற்கான விளக்கத்தைத் தருமாறு அ. தி. மு. க விடம் கோரியுள்ளது.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, இந்த அமைச்சர்கள் அப்படிக் கூறியிருக்கமாட்டார்கள் என்றும், அவர்கள் என்ன கூறினார்கள் என்பதை அவர்களிடமே கேட்கப்போவதாகவும், அவர்கள் சொல்லாதது தவறாக வெளியாகியிருக்கலாம் எனவும் கூறினார். (சி)

# எந்நேரமும் பி.ஜே.பி. தடைசெய்யப்படலாம்

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக்கட்சி இந்திய அரசாங்கத்தால் தடைசெய்யப்படலாம் என்று தெரியவருகின்றது.

மனிதவள அமைச்சர் அர்ஜுன் சிங் இது பற்றி பரிசீலித்து வருகின்றார்.

பாரதீய ஜனதாக்கட்சியை தடைசெய்துவிட்டால் இந்திரா காங்கிரசுக்கு தலையிடியாக உள்ள அயோத்திப்பாபர் மசூதி பிரச்னையில் கொஞ்சம் ஆறுதல் கிடைக்குமென்று நரசிம்மராவின் அரசு கருதுவதாலேயே இது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது என்றும் செய்திகள் கூறுகின்றன. (சு)

### தெரிவுக்குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தெரிவுக்குழு எதையுமே காணவில்லை. ஒருமித்த உடன்பாடு ஒன்றிற்குப் பதிலாக இப்போது இரண்டு அறிக்கைகள் உள்ளன ஒன்று பெரும்பான்மையரது. மற்றது சிறுபான்மையரது ஜனாதிபதி பிரேமதாஸா இதுபற்றி என்ன செய்யப்போகிறார் என்று தெரியவில்லை என்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (ரி)

### மட்டுநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்த சோதனை நிலையங்கள் அகற்றப்பட்டு, புதிதாகக் கல்லடி-சரவணை வீதிச் சந்தியில் சோதனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

புலிகளின் அச்சுறுத்தலை அடுத்தே, வேறு பல சோதனை நிலையங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

### வடக்கு கிழக்கு

(1-ம பக்கத்தொடர்ச்சி)

வித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:

நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றை நடத்திலும் பார்க்க, முக்கியமான பிரச்னை வடக்கு-கிழக்குப் பிரச்னையாகும். இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (சு)

### படைகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஆண் ஊர்காவற்படையினருக்கு உதவியாகவே இப்பெண்கள் ஊர்காவற்படை அமைக்கப் பட்டுள்ளதாகவும் கண்காணிப்பு நடவடிக்கையில் இப்படையினர் ஈடுபட்டு வருவதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படையினருக்கு 303 ரகத் துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதியில் சிங்கள-முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக இதுவரையில் 14 470 ஊர்காவற்படையினர் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் அரசு மேலும் தெரிவித்துள்ளது. தமிழர் மற்றும் தமிழ்ப் பெண்கள்மீது வன்செயல்களை கட்டவிழ்த்து விடுதல் போன்ற செயல்களில் இப்படையினர் ஈடுபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

### எதிர்காலத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னங்களை கொள்வனவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமையும் மேலும் கிழக்கில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஸ்ரீலங்கா அரசு எதனையும் சாதித்ததாகக் கூறமுடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

### தீர்வுத் திட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

14 மாதங்கள் ஆகின்றன.

இந்திய-இலங்கை உடன்பாட்டின் கீழ் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணம் பிரித்துவைக்கப்படவேண்டும் என்பதில் சிங்கள மற்றும் முஸ்லிம் கட்சிகள் உடன்பாடு கண்டுள்ளன என்று மேற்படி குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி. வடக்கு-கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பதா? இல்லையா? என்று சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும்.

ஆனால் இலங்கை ஜனாதிபதி ஒரு விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்தக் கருத்துக் கணிப்பை ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒத்திவைத்துக் கொண்டிருக்கிறார்.

வடக்கு கிழக்கு தனித்தனி மாகாணசபையை எல்லா சிங்கள அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று இந்த அறிக்கையை பார்த்தபோது ஏற்படுகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை இதற்கு உடன்பட்டிருந்த போதிலும். எம். ஈ. பி. கட்சி வடக்கு கிழக்கு இணையாமையை மட்டும் எதிர்க்கிறது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு இலங்கை இனப்பிரச்சனைக்கு இதுவே இறுதித் தீர்வு என்று கூறப்பட்டதில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இந்திய சரத்துகள் நீக்கப்பட்டுவிடும்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முன்பிருந்தே எதிர்த்து வரும் பிரேமதாசா இப்போது முடிவுகளை ஏற்றுக் கொள்ளலாம். இந்த நேரத்தில் இந்தியாவும் இது பற்றி கருத்துத் தெரிவிக்க நேரமில்லை.

இந்தத் தெரிவுக்கமிட்டியின் தீர்வு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநிவாசன் திட்டத்தின் அடிப்படையில் உள்ளதென்று பத்திரிகைகள் விமர்சிக்கின்றன.

ஸ்ரீநிவாசனின் 10 அம்சத் திட்டம் இலங்கை ஒருமைப்பாட்டின்கீழ் சமஷ்டிமுறைக்கு மாற்றப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அமைந்தது. (சு)

இப்பத்திரிகை ""ஈழநாடு"" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8